

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 357 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 21 – புதன்கிழமை 06 ஆகஸ்ட் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 357 : Thiruvalluvar Year - 2056 - Aadi 21 - Wednesday 06 August 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## தென் மாவட்டங்கள் மிகப் பெரிய தொழில் வளர்ச்சியடையும்!

# வாகன உற்பத்தியின் தலைநகரம் தமிழ்நாடு!

## தூத்துக்குடியில் ‘வின்ஃபாஸ்ட்’ மின் வாகன ஆலைத் தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!




**தூத்துக்குடி, ஆக. 6 -**

**“இந்தியாவின் மொத்த மின் வாகன உற்பத்தியில் 40 விழுக்காடு தமிழ்நாட்டிலிருந்துதான் உற்பத்தியாகிறது. தமிழ்நாடுதான் இந்தியாவின் வாகன உற்பத்தி மற்றும் மின் வாகன உற்பத்தியின் ‘கேப்பிட்டல்’ என்று நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்வேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடியில் ‘வின்ஃபாஸ்ட்’ மின் வாகன உற்பத்தி ஆலையைத் தொடங்கி வைத்து உரையாற்றும் போது பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.8.2025) தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் சிலாநத்தம் தொழிற்பூங்காவில் வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின் வாகன உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு :-

வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின் வாகன உற்பத்தி ஆலையின் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்விற்கு, வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகளை நான் இந்த நேரத்தில் மனதார வரவேற்கிறேன்! வியட்நமிஸ் மொழியில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், சாமுன் நேஒய் வின்ஃபாஸ்ட் தமிழ்நாடு.

தெற்காசியாவின் மிகப்பெரிய குழுமங்களில் ஒன்றாக இருக்கக்கூடிய பெருமைமிகு வின் குழுமம், முதலீடுகளுக்காக, தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்ததற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெருமையாகவும் இருக்கிறது!

### வியப்பும் பெருமையும்!

வியட்நாம் என்றாலே வியப்புதான்! அந்த வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின்ஃபாஸ்ட், நான் அடிக்கல் நாட்டி, 18 மாதத்தில் தமிழ்நாட்டில் தன்னுடைய நிறுவனத்தை தொடங்கி, நமக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள்!

நம்முடைய தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும் இந்தப் பெருமையில் பெரும் பங்குண்டு!

டி.ஆர்.பி. ராஜாவின் உழைப்புக்கு இந்த வின்ஃபாஸ்ட்டே சாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

மின் - வாகனங்கள் உற்பத்தியில் முன்னணி நிறுவனமாகவும் மற்றும் நிலைத் தன்மை கொண்ட போக்குவரத்தை முன்னெடுக்கும் நிறுவனமாகவும் இருக்கும் வின்பாஃஸ்ட், தமிழ்நாடு மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு, தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்!

### தமிழ்நாட்டில் 40 சதவிகித உற்பத்தி!

இந்தியாவின் மொத்த மின் வாகன உற்பத்தியில், 40 விழுக்காடு தமிழ்நாட்டில் இருந்து தான் உற்பத்தியாகிறது! தமிழ்நாடு தான், இந்தியாவின் வாகன உற்பத்தி மற்றும் மின் வாகன உற்பத்தியின் ‘கேப்பிட்டல்’ என்று நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்வேன்! சென்னை தான் இந்தியாவின் டெட்ராய்ட்!

திருப்பெரும்புதூரில் எப்படி முதல் கார் உற்பத்தி திட்டம் தொடங்கப்பட்டதோ, அதேபோன்று, இன்றைக்கு தூத்துக்குடி யில் முதல் மின்வாகன உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது! இதன்மூலம் தமிழ்நாட்டிற்கும், வியட்நாமிற்கும் இடையேயான வர்த்தக மற்றும் பொருளாதார வளர்ச்சி மேம்படும்!

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்


நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை



2538

இளைஞர்களுக்குப் பணிநியமன ஆணைகள் வழங்கும் விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

நாள் : 6.8.2025 | நேரம் : காலை 10:30 மணி | இடம் : சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம்

• உதவிப் பொறியாளர்கள் • நகரமைப்பு அலுவலர்கள்
• இளநிலைப் பொறியாளர்கள் • துப்புரவு ஆய்வாளர்கள்

உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள் பணிநியமன ஆணைகள் பெறுகின்றனர்.

அனைவரும் வருக!

முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

செ.ம.தொ.இ/884/வரைகலை/2025

எல்லார்க்கும் எல்லாம்!